මහජන ආරක්ෂක අමාත්‍යාංශය
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
MINISTRY OF PUBLIC SECURITY

පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
DEPARTMENT FOR REGISTRATION OF PERSONS

10 වන මහල, සුහුරුපාය, ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල.
10 ஆம் மாடி,சுஹுருபாய, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.
10th Floor, Suhurupaya, Sri Subhuthipura rd, Battaramulla.

මගේ අංකය / எனது இல. / My Ref. DRP/OP/01/DS/03/වෙළුම IV

ඔබේ අංකය / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2023.04.19

"විශ්වසනීය පුද්ගල අනන්‍යතාව හැඳුනුම්පතයි" "அடையாள அட்டை - நம்பகத்தன்மையான தனிநபர் அடையாளம்" "Identity Card, the Trusted Personal Identity"

**ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின்**
**சுற்றறிக்கை : 01/2023**

சகல பிரதேச செயலாளர்களுக்கும்

**<u>பிறப்புச் சான்றிதழ் இல்லாத இலங்கைப் பிரஜைகளுக்கு தேசிய அடையாள அட்டை விநியோகித்தல்.</u>**

40 வயதுக்கு மேற்பட்ட பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்கள், தங்கள் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் நபர்களுக்கு இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் மற்றும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் தயவுடன் அறியத்தருகின்றேன்..

02. அதன்படி, எந்தவொரு கிராம அலுவலர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட 40 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்து, பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தால் இதுவரை தேசிய அடையாள அட்டையைப் பெறாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். அதற்கு, கீழே உள்ள வழிமுறைகளைப் பின்பற்றி உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

I. ஆ.ப.தி.1,7,8 விண்ணப்பப்படிவம்
II. ஆ.ப.தி/இ/03/01 பிரகடனம்
III. பெயர், முகவரி, பிறந்த திகதி, பிறந்த இடம், கிராம அலுவலர் பிரிவு, பிரதேச செயலக பிரிவு மற்றும் விண்ணப்பதாரி இலங்கை பிரஜை என குறிப்பிடும் சத்தியக் கடதாசி
IV. ஆ.ப.தி/இ/02/03 பிரகடனம் (குறித்த தண்டப்பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன்)
V. பிறப்பு பதிவு செய்யப்படவில்லை என்பதற்காக மேலதிக மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்படும் தேடுதல் விளைவுப் பத்திரத்துடன் பெயர் மற்றும் பிறந்த திகதியை உறுதிபடுத்தக்கூடிய பின்வரும் ஆவணங்களில் **ஒரு ஆவணம்** எழுத்துமூல சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

a. பிள்ளைகள் இருந்தால் அவர்களின் பிறப்புச்சான்றிதழ்
b. பாடசாலை விடுகைப் பத்திரம்
c. முதியோர் அடையாள அட்டை
d. தோட்ட பிறப்புச் சான்றிதழ் மற்றும் தோட்ட விடுகைப்பத்திரம்
e. வட கிழக்கு பிரதேசங்களில் வசிக்கும் ஆட்களை அடையாளப்படுத்துவதற்காக விநியோகிக்கப்பட்டுள்ள விசேட / தற்காலிக அடையாள அட்டை
f. அக்குடும்பத்திற்காக (மேலே எல் குறிப்பிடப்பட்டுள்ள) விநியோகிக்கப்பட்டுள்ள குடும்ப விபரம் குறிப்பிடப்பட்ட குடும்ப அட்டை
g. செல்லுபடியாகும் கடவுச்சீட்டுகள்
h. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்
i. விவாகச் சான்றிதழ்
j. அடையாளப்படுத்துவதற்காக விநியோகிக்கப்பட்டுள்ள நம்பகமான நிறுவனங்களின் அடையாள அட்டை
k. பிறந்த வேளையில் சம்பிரதாயமாக தயார் செய்யும் ஜாதகக்குறிப்பு / கேந்திரம் / ஜனனக்குறிப்பு போன்றவற்றை பிரதேச செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் மூலம் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

දුරකථන / தொலைபேசி / Telephone (011) 5226100
ෆැක්ස් / பெக்ஸ் / Fax (011) 2862198
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail info@drp.lk
වෙබ් / இணையதளம் / Web www.drp.gov.lk

03. பெயர் மற்றும் பிறந்த திகதியை உறுதிப்படுத்த மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாவிட்டால், விண்ணப்பதாரரின் பெயர், பிறந்த திகதி, பிறந்த இடம் மற்றும் முகவரி ஆகியவற்றைக் கொண்ட கிராம அலுவலரால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்டு, ,சம்பந்தப்பட்ட நபரின் அறிக்கையுடன் சமர்ப்பிக்க முடியும்.

04. மேலும், ஆ.ப.தி/இ/03/01 பிரகடனத்தின் 05ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையை வைத்திருக்கும் விண்ணப்பதாரரின் நெருங்கிய உறவினரின் விபரங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை வைத்திருக்கும் மூன்று நபர்களின் சான்றொப்பம் அவசியமாகும்.

05. மேலும், பிறப்புச் சான்றிதழ் இல்லாத மற்றும் <u>40 வயதுக்குட்பட்ட</u> நபர்களுக்கு உத்தேச வயதுச் சான்றிதழ் அல்லது மகவேற்பு சான்றிதழுடன் (Adoption Certificate), பிறந்த திகதியை உறுதிபடுத்தக்கூடிய பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்து, தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும். இருப்பினும் உத்தேச வயதுச் சான்றிதழில் பிறந்த தேதி குறிப்பிடப்படவில்லை என்றால், பின்வரும் ஆவணங்களில் ஒன்றோடு பெயர், பிறந்த தேதி மற்றும் பிறந்த இடம் ஆகியவற்றைக் குறிக்கும் முறையான சத்தியக்கடதாசியினை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

a. பிள்ளையொன்றினுடைய பிறப்புச் சான்றிதழ்
b. பாடசாலை விடுகைப் பத்திரம்
c. சுகாதார வளர்ச்சிப் பதிவேடு
d. தோட்ட பிறப்புச் சான்றிதழ்
e. திருமணமாகியிருந்தால் விவாகச் சான்றிதழ்

06. இலங்கைப் பிரஜை அல்லாத ஒருவர், பிறப்புச் சான்றிதழ் வைத்திருப்பவர் அல்லது ஏற்கனவே தேசிய அடையாள அட்டையைப் பெற்ற ஒருவர், இதன் மூலம் வழங்கப்படும் சலுகையை பயன்படுத்தி மீண்டும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காமல் இருப்பதை உறுதிசெய்து, சில மோசடி நபர்கள் தமது அடையாளத்தைப் பற்றிய தகவல்களை மறைத்து புதிய அடையாளத்தைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளைத் தடுப்பதற்கு, உங்கள் கவனத்திற்கு முன்வைப்பதோடு, இது தொடர்பாக சகல கிராம அலுவலர்களின் சிறப்புக் கவனத்தை செலுத்துமாறு மேலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஜீ.பிரதீப் சப்புதந்திரி**
ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம்

பிரதிகள் :

01. செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு - தெ.கொ.
02. சகல மாவட்ட செயலாளர்கள் - தெ.கொ
03. கணக்காய்வாளர் நாயகம் - தெ.கொ
04. சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள் (ஆ.ப.தி) - தெ.கொ மற்றும் அலுவலக பணிகுழாமிற்கு தெரியப்படுத்துவதற்கு
05. பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள அ.உத்தியோத்தர்கள் - தெ.கொ மற்றும் உ.ந